செய்தி வெளியீடு எண். 66 நாள்: 30.01.2018

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக மனிதநேய வார நிறைவு விழா மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் நடைபெற்றது**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, வேண்பாக்கம் ஜெயகோபால் கரோடியா அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக மனிதநேய வார நிறைவு விழா மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் இன்று (30.01.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி குறித்து மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது :

மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் வழியில் நடக்கும் அரசு “எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்ற கூற்றுக்கு இனங்க ஏழை, எளிய மக்களின் வாழ்வு மேம்படுவதற்கு தமிழக அரசு அனைத்து திட்டங்களையும் சிறப்பாக வகுத்து செயல்படுத்தி வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மக்களின் வாழ்வு பொருளாதாரம் அடிப்படையிலும், கல்வியறிவு பெறுவதிலும் அரும்பாடுபட்ட சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களை இன்று நினைவு கூறுகிறோம். மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த 6 ஆண்டுகளில் பள்ளி கல்வித்துறை மாணவர்களுக்கு ரூ.1,37,255 கோடி ஒதுக்கீடு செய்து கல்வியறிவை பெறுவதற்கு ஊக்கப்படுத்தி வருகிறது. இது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் ஒதுக்கீடு செய்யப்படாத நிதியாகும். பள்ளி மாணவர்களுக்கு 14 வகையான கல்வி உபகரணங்களையும், விலையில்லா சைக்கிள், பஸ் பாஸ் மற்றும் அறிவு பசியை நீக்கும் மடிக்கணினிகளை வழங்கி பள்ளி கல்வித்துறையின் மூலம் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் மூலம் இடைநிற்றல் இல்லாத நிலை வேண்டும் என்பதற்காக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

அனைத்து அரசு பள்ளிகளிலும் அடிப்படை வசதிகளான வகுப்பறைகள், ஆய்வக கட்டடங்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு கழிவறை வசதிகள் போன்றவைகள் சிறப்பாக கட்டி தரப்பட்டுள்ளது. இதனால் அரசு பள்ளிகளில் சேர்க்கை விகிதம் அதிகரித்து, தேர்ச்சி விகிதமும் அதிகரித்து வருகிறது. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் பயிலும் அரசு, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு சிறப்பு கட்டண சலுகை மற்றும் தேர்வு கட்டண சலுகை போன்ற பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்களின் இடைநிற்றலை தடுக்க 3-5 வரை உள்ள மாணவிகளுக்கு வருடந்தோறும், ரூ. 500 ஊக்கத்தொகையும், 6-ம் வகுப்பு வரை உள்ள மாணவிகளுக்கு வருடந்தோறும் ரூ.1000-ம் ஊக்கத்தொகையும், 7-8-ம் வகுப்பு வரை உள்ள மாணவிகளுக்கு வருடந்தோறும் ரூ.1,500-ம் வழங்கப்பட்டு வருகிறது. உயர் கல்வியை ஊக்கும்விக்கும் வகையில் ஆண்டுதோறும் ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் பயில்பவர்களுக்கும் பொறியியல், போஸ்மேட்டிக் தொழில்நுட்ப கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தீண்டாமையின் தீமையை ஒழிப்பதற்கும், அதை விழப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு செயற்பாடுகளை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்டு வருகிறது. இதற்காக மனித நேய வார விழா ஜனவரி 26 முதல் 30-ம் தேதி வரை நடத்தப்பட்டு வருகிறது. மனித நேய வார விழாவையொட்டி பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு, 117 மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கப்படுகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சி குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது :

தேச தந்தை மகாத்மாகாந்தி அவர்களின் நினைவு தினமான இன்று மனித நேயம் வார நிறைவு விழாவாக அனுசரிக்கப்படுகிறது. அரசு பள்ளியில் பயிலும் மாணவர்கள் தனியார் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு நிகராக விளங்கிட தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பள்ளி செல்லும் மாணவர்களுக்கு விலையில்லா நான்கு செட் சீருடைகள் முதல் காலனி வரை அனைத்து சலுகைகளை வழங்கி கல்வி பயில மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகிறது. அவர்களின் அறிவு பசியை போக்குவதற்கு 11-ம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் போன்றவற்றையும் அரசு வழங்குகிறது.

வரும் பிப்ரவரி 24-ம் தேதியிலிருந்து வேலைகளுககு செல்லும் மற்றும் சுய தொழில் புரியும் மகளிர்களுக்கு 50 சதவிகிதம் அல்லது ரூ. 25 ஆயிரம் மானிய விலையில் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட நகராட்சி, பேரூராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். 18 முதல் 40 வயது வரை, 8-ம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி, வாகனம் ஓட்டத் தெரிந்த உழைக்கும் மகளிர்களுக்கு இத்திட்டத்தில் பயன்பெறலாம். விண்ணப்பித்தவர்களில் தகுதி வாய்ந்த விண்ணப்பங்களை உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவர்களுக்கு மானிய விலையில் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படும். திருவள்ளுர் மாவட்டத்தில் 1,746 ஸ்கூட்டர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களாகிய நீங்கல் மனித நேயத்துடன் இருக்க வேண்டும். நல்ல முறையில் நல்ல சமுதாயத்தை உருவாக்கிட வேண்டும். திருவள்ளுர் மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக மாநிலத்தில் திகழ செயல்பட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

மனிதநேய வார விழா தொடர்பாக பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற 13 அரசு உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளைச் சேர்ந்த 117 மாணவர்களுக்கு மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள். பின்னர், பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆகியோரின் கலைநிகழ்ச்சிகளை கண்டு ரசித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.கே.எஸ்.விஜயகுமார் (கும்மிடிப்பூண்டி), மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர் த.இராஜேந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.மு.கலைச்செல்வி, பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் திரு.வே.முத்துசாமி, பொன்னேரி வட்டாட்சியர் திருமதி.ஜெ.சுமதி, பொன்னேரி (ஆ.தி.ந) தனி வட்டாட்சியர் திரு.பி.கார்த்திகேயன், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**